**OS.No.203/2024, Dated 22.01.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 22nd day of January 2025

**வா.சா.1 - லட்சுமி க/பெ முனுசாமி கவுண்டர் வரவழைக்கப்பட்டு 1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். 2, 3 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்த சகோதரிகள் ஆவார். இந்த வழக்கு சொத்தில் பாகம் வேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துளில் நிலமும், வீடும் உள்ளன. அந்த நிலம் மட்டும் சுமார் 4.5 ஏக்கர் விஸ்தீரனம் இருக்கும். வீட்டின் அளவு எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள 8வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதி தனியாக கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். எனது தகப்பனார் துரைசாமிக்கு 2 மனைவிகள் ஆகும். அவரது முதல் மனைவி பெயர் சின்னம்மாள் ஆகும். 5வது அயிட்ட சொத்து சின்னம்மாளின் தாய் வீட்டு சொத்து என்றால் சரிதான். சின்னம்மாளின் சகோதரி மாணிக்கம்மாள் 5வது அயிட்ட சொத்தில் அவருக்கு இருந்த பங்கை சின்னம்மாளுக்கே எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 11.08.1960லேயே கிரையம் கொடுத்துவிட்டாரா என்றால் எனக்கு அது தெரியாது. எனது தகப்பனாருக்கும் சின்னம்மாளுக்கும் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். வம்சவிருத்திக்காக சின்னம்மாளின் சம்மதத்துடன் எனது தாயாரை எனது தகப்பனார் திருமணம் செய்தார் என்றால் சரிதான். எனது தாய் தகப்பனாருக்கு நான் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் மணி என்பவரும் வாரிசுகள் ஆவோம். எனக்கு 1989 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. ருக்மணிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது தகப்பனாருக்கு தொழில் விவசாயம் மட்டும் தான். 1ம் பிரதிவாதி ராணுவத்தில் பணிபுரிந்ததால் அவரது

வருமானத்தை கொண்டும் எனது தகப்பனாருடன் சேர்ந்து எங்களுக்கு திருமணம் செய்துவைத்தார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றாலும் நான் இந்த வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது தகப்பனார் எங்களுக்காக பெற்ற கடன்களை 1ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆன பின்னிட்டு தாவா சொத்துகளை நான் கூட்டாக அனுபவிக்கவே இல்லை என்றாலும் எனக்கு தாவா சொத்துகளில் பாகம் உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1992 ஆம் ஆண்டு காலமானார். எனது பெரியம்மாவின் சொத்துகளை வாரிசு என்ற முறையில் எனது தகப்பனார் அடைந்து 1985 ஆம் ஆண்டு வாய்மொழியாக 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிவிட்டார் என்றால் இல்லை. தாவா 1 முதல் 4 மற்றும் 6, 7 அயிட்ட சொத்துகள் எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கியதால் தான் அவர் பெயரில் பட்டாக்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரரான சுப்பிரமணி தற்சமயம் உயிருடன் இல்லை. அவருக்கு திருமணம் ஆனது ஆனால் குழந்தைகள் இல்லை. எனது சகோதரர் சுப்பிரமணி இறந்த பின்னிட்டு அவரது மனைவி வேறு திருமணம் செய்துகொண்டார். சுப்பிரமணியின் மனைவி மஞ்சுளாவிடம் இருந்து எனது தகப்பனார் சர்வே எண்.61/1 ல் உள்ள 30 சென்டை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்து எனது பெரியம்மாவிற்கு பூர்வீகமாக வந்த சொத்தாகும். மஞ்சுளாவிடம் இருந்து 1ம் பிரதிவாதிதான் கிரையம் வாங்கினார். கடந்த 28.06.1993 தேதியில் 1ம் பிரதிவாதி அந்த சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 8வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு கடன்

வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு அந்த சொத்தை 1ம் பிரதிவாதி தனது மனைவியின் பெயரில் செட்டில்மெண்டு எழுதிவைத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. 1985 ஆம் ஆண்டு எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே பாகப்பிரிவினை ஏற்பட்டு 1ம் பிரதிவாதி தனிப்பட்ட வகையில் சொத்துகளை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துகளை அவருடைய மகனுக்கு செட்டில்மெண்டு எழுதிவைத்துள்ளார் என்றால் இல்லை. எனக்கு பாகம் இருந்திருந்தால் 1992 ல் எனது தகப்பனார் காலமான உடனே பாகம் கேட்டிருப்பேன் என்றாலும் எனவே நான் கூறியுள்ள பாகம் எனக்கு கிடைக்ககத்தக்கதல்ல என்றால சரியல்ல. சொத்துகளின் மதிப்பு அதிகமானதால் 1ம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூட்டாக சொத்துகளை அனுபவிக்காத போது உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல செய்துள்ள இந்த வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா

சார்பு நீதிபதி,

வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.